[1974 மார்ச் 16

கோயம்புத்தூர்—சென்னை நெடுஞ்சாலை

* 462 வினா.—திரு. வா. மை. அப்துல் ஜப்பார்: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

கோயம்புத்தூர்—சென்னை—தேசிய நெடுஞ்சாலையில் நடைபெறும் சீரமைப்புப் பணி எப்பொழுது முடிவுபெறும் ?

மாண்புமிகு திரு. ப.உ. சண்முகம் : இப்பணிகள் 1974-ம் ஆண்டு ஜூன் மாத இறுதியில் முடிவுபெறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. வா. மை. அப்துல் ஜப்பார் : இந்த தேசீய நெடுஞ்சாலை ஒட்டு மொத்தமாக ஏறக்குறைய கேரள எல்லையில், கர்நாடக எல்லையில் இந்த வேலை தொடர்ந்து நடைபெறுகிறது. அதன் காரணமாக பல சாலைகள், உபசாலைகள், வண்டிகள் செல்வதற்கு சீரான முறையில் இல்லாமல் இருக்கும் நிலை கடந்த இரண்டாண்டுகளாக இருந்து வருகிறது. ஆகவே இதற்குப் பதிலாக திட்டு திட்டாக எடுத்துக் கொண்டு 15 மைல், 20 மைல் என்று எடுத்துக்கொண்டு எல்லா வேலைகளையும் குறிப்பிட்ட காலத்திற்குள் ஆறுமாத காலத்திற்குள் முடித்து விட்டு அடுத்த திட்டுக்குச் செல்லும் வகையில் ஒரு திட்டத்தை மேற்கொண்டால் பிரயாணிகளுக்கு இடைஞ்சல் இன்றி செல்லவும் முடியும் அதோடுகூட அதே சமயத்தில் சீரமைப்பு வேலையும் நடைபெறும் அல்லவா? எப்படியாவது இந்த வேலையை சீக்கிரம் முடித்து பிரயாணிகளின் அசௌகரியத்தைக் குறைக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. ப.உ. சண்முகம் : இவ்வளவு வேகமாகச் செய்தே இரண்டு ஆண்டுகள் ஆகின்றன. இன்னும் திட்டு திட்டாக எடுத்தால் 12 ஆண்டுகளாகிவிடும். சீக்கிரமாக முடிக்க அரசு நடவடிக்கைகள் எடுக்கும். இந்த வேலைகளில் 70 சதவிகிதம் 1974 ஜூன்-க்குள் முடிவடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. வை. பாலசுந்தரம் : பொதுவாகவே தேசீய நெடுஞ்சாலைகளில் நடைபெறுகிற பணிகள் மந்தமாக இருக்கிறது என்று சொல்லப்படுகிறது. இதற்குக் காரணம் மத்திய அரசு தான் என்று பரவலாகக் கூறப்படுகிறதே, அதைத் தவிர்க்க தேசீய நெடுஞ்சாலைகளில் செய்யப்படுகிற அத்தனை பணிகளையும் மாநில சர்க்காரே செய்வதற்கான அங்கீகாரத்தைப் பெற மத்திய அரசிடம் வற்புறுத்தியிருக்கிறதா தமிழக அரசு என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப.உ. சண்முகம்: தேசீய நெடுஞ்சாலையைப் பொறுத்த வரையில் தமிழக அரசுதான் செய்கிறோம். நாம்தான் செய்கிறோம். அதற்காக சென்டேஜ் $7\frac{1}{2}$ சதவிகிதம் தருகிறார்கள். இருக்கிற காலதாமதம் எல்லாம் எஸ்டிமேட் தயாரிக்கப்பட்டு அல்லது டெண்டர்கள் வாங்குவது இவற்றிற்கெல்லாம் அவர்களிடம் ஒப்புதல் வாங்குவதில் ஏற்படும் தாமதமே தவிர ஒரு தடவை டெண்டர்கள் முடிவடைந்துவிட்டால் வேலைகளைத் துரிதமாக நடத்துவதற்கு பொறுப்பு தமிழக அரசுக்குத்தான் இருக்கிறது.